முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 261/2020

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வீராச்சாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : வேடசாமி | கிராமம் | : பூலுவப்பட்டி |
| வயது | : 72 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 22-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகளின் தந்தை எனக்கு என்ன உறவு என்றால் என் அத்தையின் மருமகன். தாவாச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் தங்கவேலுக்கு பாத்தியம். அதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அவர் கிரயம் பெற்றுள்ளார். தாவாச் சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து தங்கவேலுவின் தந்தையால் சுப்பன் செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் தெரியாது. தங்கவேலு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியாது. தாவாச் சொத்து பொதுக் குடும்பச் சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

2) தங்கவேல் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். அவரை கோவையில் முதியோர் இல்லத்தில் வைத்து இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. தங்கவேலுக்கு மனநிலை சரியில்லாத போது ஆவணம் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. தங்கவேல் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தபோது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. இந்த விவரங்களை வாதி சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) பிரதிவாதிகள் எனக்கு ஆகாதவர்கள் என்பதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரமும் தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.08.22 19:00:51 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.